

# பிரதமர் மோடி பெற்ற சர்வதேச விருதுகளும் - நாடாளுமன்றங்களில் அவர் நிகழ்த்திய உரைகளும்!








ஒன்றிய பா.ஜ.க. அரசு வட்டாரங்கள் தெரிவித்ததாகத் தலைப்பில் கண்டுள்ள விவரங்களை ஜூலை 10 ஆம் தேதி தினமணி வெளியிட்டு இருக்கிறது. தனிப்பட்ட மோடிக்கு விருதோ, நாடாளுமன்றங்களில் உரையாற்ற வாய்ப்போ கிடைக்காது. இந்தியாவின் பிரதமருக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. 17 நாடுகளின் நாடாளு மன்றங்களில் உரையாற்ற வாய்ப்பு கிட்டுகிறது. இதில் என்ன வியப்பு இருக்கிறது? ஆனால் செய்தி எந்த விதத்தில் வெளியிடப்படுகிறது. என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட விருதுகள் என்னென்னவை? அவை எதனால் அவருக்கு வழங்கப்பட்டன? அப்படி அந்நாடுகள் விருதுகளை வழங்குவதற்கு ஏதாவது சிறப்பான காரணங்கள் இருக்கின்றனவா? மற்றைய இந்திய பிரதமரிலிருந்து சிறப்பு அம்சம் வேறு ஏதாகிலும் மோடியிடம் கண்டு அதனால் அவருக்கு விருது வழங்கப்பட்டதா என்ற விவரங்கள் எதனையும் ஒன்றிய அரசுத் தெரிவிக்கவில்லை.

விருதுகள் வழங்கப்பட்ட நாடுகள் விருதுகளுக்கு என்று பெயர் சூட்டி இருக்கலாம். அவை எல்லாம் என்ன பெயர் என்று வெளியான செய்திகளில் இடம் பெறவில்லை. அந்த விருதுகள் என்ன நோக்கத்திற்காக இந்தியப் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டன என்ற குறிப்பும் இல்லை. இவை எல்லாம் இருந்திருந்தால் விருதைப் பற்றிய ‘கனம்’ கூடியிருக்கும்.

தமிழ்நாட்டிலே பொதுவாழ்க்கையில் ஒருவரும் கல்வியாளர்களில் ஒருவருமாக புகழ்பெற்ற இருவர் வாழ்ந்தனர். அவர்கள் இருவரும் இரட்டையர்கள். மூத்தவர் பெயர் சர்.ஏ.இராமசாமி முதலியார். இளையவர் பெயர் ஏ.இலட்சுமணசாமி முதலியார். இவர்கள் இருவரும் அவரவர் துறைகளில் சிறந்து விளங்கிய அறிஞர் பெருமக்களாவர். உலக நிறுவனங்கள் அவர்களை - தனித்தனியாக அழைத்து ‘டாக்டர்’ பட்டங்களை வழங்கின. 20க்கும் மேற்பட்ட முறைகள் அவர்களுக்கு அவ்வாறு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டன. இவை அடிக்கடி நாளேடுகளில் வெளிவரும்.

இந்த ‘டாக்டர்’ பட்டங்கள் எதற்காக வழங்கப்பட்டன என்கிற குறிப்பு அந்தச் செய்திகளில் இடம் பெறும். அதைப் போல பிரதமர் மோடிக்கு அளிக்கப்பட்ட விருதுகளின் விவரங்கள் ஏதும் நாளேடுகளில் இடம் பெறவில்லை என்பதே நமது கவலை. அவருக்கு வழங்கப்பட்ட இந்த விருதுகள் ‘அவர் தேநீர் விற்றவர்’ என்பதற்காக இருக்காது. அவர் என்ன படித்தவர் என்பது இதுவரை நாட்டிற்கு தெரியாமல் இருக்கிறதே அதற்காக விருதுகள் வழங்கமாட்டார்கள். அவர் மண் வீட்டில் வாழ்ந்தவர் என்பதற்காக நிச்சயமாக இந்த விருதுகளை வழங்கி இருக்க மாட்டார்கள். இவர் முதன் முதலாக நாடாளுமன்றத்திற்குள் நுழையும் போது ‘மண்மாதாவை’த் தொட்டு வணங்கினாரே அதற்காக விருது வழங்கப்பட்டு இருக்குமா? இருக்காது.

மோடி மூன்றாவது முறை இந்தியாவின் பிரதமராகி இருக்கிறாரே அதற்காக இருக்குமா? இருக்காது. மூன்றாவது முறை பா.ஜ.க. முழு ஒன்றிய அரசாக இல்லாமல் மைனாரிட்டி அரசாக சந்திரபாபு நாயுடு, நிதிஷ்குமார் தயவில் இருக்கிறதே அதற்காக விருது வழங்கப்பட்டு இருக்குமா? வாய்ப்பில்லை. ஒரு நாட்டின் பிரதமர் 11 ஆண்டுகளாகப் பொறுப்பில் இருந்து வருகிறார். இதுவரை பத்திரிகையாளர்களை அவர் சந்தித்தது இல்லை. இதற்காக மோடிக்கு சர்வதேச விருதுகள் வழங்கியிருப்பார்களா? இருக்காது.

தினமணி வெளியிட்டுள்ள பிரதமருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ள செய்தியில் இதற்கு முன்னர் இந்திய பிரதமராகப் பொறுப்பில் இருந்தவர்கள் யாராவது இத்தகைய விருதுகள் பெற்று இருக்கிறார்களா என்றால் அந்தக் குறிப்பும் செய்திகளில் இல்லை. விருதுகள் பெற்ற இந்திய பிரதமர்களின் பெயர்கள் நமக்கும் நினைவு இல்லை. அப்படி வழங்கப்பட்டதாகவும் தெரியவில்லை. வழங்கி இருந்தால் தினமணி அந்தச் செய்தியைக் கண்டறிந்து வெளியிட்டு இருக்கும்.

நாம் ஏன் இப்படி உறுதியாகச் சொல்கிறோம் என்றால் 17 நாடுகளின் நாடாளுமன்றங்களில் மோடி உரையாற்றியதை சாதனை என்று வெளியிட்டுவிட்டு இந்தியப் பிரதமர்களில் யார் யார் வெளிநாடு நாடாளுமன்றங்களில் எத்தனை முறை உரையாற்றி இருக்கிறார்கள். என்கிற விவரத்தை கீழ்காணும்படி தந்து இருக்கிறது.

| | |
|---|---|
| **நரேந்திர மோடி** | **- 17** |
| **மன்மோகன் சிங்** | **- 7** |
| **இந்திரா காந்தி** | **- 4** |
| **ஜவகர்லால் நேரு** | **- 2** |
| **ராஜீவ் காந்தி** | **- 2** |
| **நரசிம்ம ராவ்** | **- 1** |

இப்படித் தினமணி தந்து இருப்பதால் விருது வாங்கிய முன்னாள் பிரதமர்கள் இருந்திருந்தால் அவர்களின் பெயரை கண்டிப்பாக போட்டு இருக்கும். அப்படி எவரும் இல்லை. ஆகவே மோடி உலக அளவில் 27 விருதுகள் பெற்ற இந்தியாவின் முதல் பிரதமர் என்று தினமணி ஒரு விருதை மோடிக்கு அளித்து பெருமைப் படுத்தலாம். தினமணியின் செய்தியில் இன்னொரு விஷயமும் தொக்கி நிற்கிறது. இதுவரை இப்படி விருதுகள் முதன் முதலில் ஒரு இந்தியப் பிரதமர் பெற்றிருப்பது மோடி மட்டுமே என்று மார்தட்டுகிறது தினமணி.

ஆனால் ஆனந்த விகடன் (16.07.2025) வார ஏடு மோடியை நக்கல் அடிக்கிறது. கீழ்காணும் கேள்வி - பதிலைப் படியுங்கள். அந்த நக்கலை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

**(?) உலகம் முழுவதும் சுற்றும் பிரதமர், மணிப்பூர் பக்கமும் வரவழைக்க என்ன செய்யலாம்?**

**மணிப்பூரில் உயரிய விருதைத் தரப்போவதாக பிரதமரிடம் தெரிவிக்கலாம். உடனே அதை வாங்குவதற்காக வந்துவிடுவார்.**

**ஆனந்த விகடனின் நக்கல் பிரதமர் மோடி வாங்கிய 27 விருதுகளையும் வாரிச்சுருட்டி கடலில் எறிந்து விட்டது போல் செய்து விட்டது.**

பிரதமர் மோடி அலங்காரப்பிரியர், அவர் அணியும் ஆடை பல இலட்சம் மதிப்புள்ளது என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன. அதோடு அவர் விளம்பரங்களை விரும்புகிறவர். சுதந்திர தின தலைப்பாகை முதல் அவர் செய்த தியானம் வரை ஏடுகளில் வண்ணப் படங்களாக மின்னியதைப் பார்த்தோம். இந்த ஆண்டு சுதந்திர தின தலைப்பாகை ஏதாவது ஒரு விருதுகள் வண்ணத்தில் அமையக் கூடுமோ என்பது தெரியவில்லை. ஆக, இந்திய நாட்டு மக்களாகிய நாம் சர்வதேச விருதுகள் பெற்ற ஒரே இந்தியப் பிரதமர் மோடி என்பதைத் தெரிந்து கொண்டோம். இந்தியர்களுக்கு எல்லா நலன்களையும் முழுமையாக அடைந்து விட்ட நிறைவு உள்ளத்திடை ஏற்பட்டு விட்டது. ஆஹா... இந்தியா ஒளிர்ந்து கொண்டே இருக்கிறது.


**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க
ஆய்வாளர்




அடுத்தது, வெளிநாடு நாடாளுமன்றங்களில் மோடி மட்டுமே 17 முறை உரையாற்றி இருக்கிறார். மன்மோகன் சிங், இந்திரா காந்தி, ஜவகர்லால் நேரு, ராஜீவ் காந்தி, நரசிம்மராவ் ஆகிய இந்தியப் பிரதமர்கள் எல்லாம் குறைவான எண்ணிக்கைகளில் வெளிநாடு நாடாளு மன்றங்களில் உரையாற்றி இருக்கிறார்கள். அதாவது ஒன்றிய அரசு வெளியிட்டு இருக்கிற இந்தச் செய்தியின் ‘அர்த்தம்’- இந்தியப் பிரதமர்களுள் வெளிநாட்டு நாடாளு மன்றங்களில் உரையாற்றிய ‘ஃபஸ்ட்’ பிரதமர் மோடி 17 முறை உரையாற்றியுள்ளார் என்பதே!

மோடியின் 17 உரைகள் எந்த ஏடுகளிலும் வந்ததாகத் தெரியவில்லை. அவர் இந்தியில் பேசினாரா ஆங்கிலத்தில் பேசினாரா என்றும் நமக்குத் தெரியாது. பேச்சின் உள்ளடக்கம் என்னவாக இருந்தது என்றும் நமக்குத் தெரியாது. அவர் முதல் கட்டத்தில் பிரதமராக இருந்தபோது அவருடைய மேடைப்பேச்சை வாஜ்பாய் போன்று மோடி பேச்சு இல்லை என்று உமாபாரதி கிண்டல் செய்தார். அவரது கட்சிக்காரரே இவர் பெரும் பேச்சாளர் இல்லை என்று ஏற்கெனவே கூறியிருக்கிறார்.

மோடியைத் தவிர குறைவாக வெளிநாடு நாடாளுமன்றங்களில் உரையாற்றிய பிரதமர்கள் ஆங்கிலத்தில் இனிமையாகப் பேசக் கூடியவர்கள். பொருளையொட்டி உரையாற்றக் கூடிய வல்லமை உடையவர்கள். மக்களை ஈர்க்கக் கூடியவர்கள். ஒரு மேடைப் பேச்சுக்கு எந்த அளவு ஒலி இருக்க வேண்டுமோ அதற்கேற்ப குரலைப் பயன்படுத்தக் கூடியவர்கள். இரைச்சல் இருக்காது. மோடியின் பேச்சுத் திறன் கவர்ச்சிக்குரியதாகவோ ஈர்ப்புக்குரியதாகவோ இருந்ததில்லை. எந்த வகையில் மோடி முதலாவதாக ஆகிவிட்டார். அதனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு விருது செய்தியையும் வெளிநாடு நாடாளுமன்ற உரை பற்றிய செய்திகளையும் எடுத்துக்கூறி இருக் கிறது. நாளை யார் பிரதமராக வந்தாலும் அரசு இந்தச் செய்தி வெளியீட்டு வேலையைச் செய்யத்தானே இருக்கிறது. அது போலத்தான் மோடியின் விருதும் நாடாளுமன்ற உரைகள் பற்றி செய்தியும் என்று கருதினால் அது தவறேதும் இல்லை.

இந்தச் செய்தியை வெளியிடச் செய்தவர்கள் பிரதமர்களின் பட்டியலை வெளியிட்டு அவர்களையெல்லாம் சிறுமைப்படுத்தலாமா? மோடிக்கு 17 முறை வாய்ப்பு கிடைத்தது அல்லது வாய்ப்பை உண்டாக்கிக் கொண்டு கூட இருக்கலாம். மற்ற பிரதமர்கள் அந்தந்த நாடுகள் கேட்டு ‘இவர்கள்’ பேசியிருக்கலாம். இதையெல்லாம் அதிகபட்சமாக பங்களிப்பு என்று எடுத்துக்கொண்டு மோடி மகிழ்வது பெருஞ் சிறப்பைத் தந்துவிடாது.

**இந்திய விடுதலைப் போராட்டக் காலத்திலேயே பெரும் பேச்சாளராகத் திகழ்ந்தவர் நேரு. நீண்டகாலம் சிறையில் இருந்தவர். அவருடைய சுதந்திரத் தினப் பேச்சு உலகப் புகழ் பெற்றது. ‘The Great Speeches of the World’ எனும் புத்தகத்தில் நேருவின் பேச்சுகள் இடம் பெற்று இருக்கின்றன. அவரைச் சிறுமைப்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்தில்தான் இந்தச் செய்தியை அரசு வெளியிட்டு இருக்கிறது.**

**நேருவின் சான்றாண்மை எங்கே? மோடி எங்கே? வரலாற்றில் நேரு எப்போதும் பேசப்படுபவர். ஆனால் மோடி....?**



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று (15.07.2025) வாராப்பூர் ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவின் போது, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 123வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஜி.அரவிந்த், இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத் ஆகியோர் உள்ளனர்.



முதல்வர் கழக தலைவர் அவர்கள் மக்களின் குறைகளை அவர்களது இருப்பிடத்துக்கே சென்று தீர்த்து வைக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ”உங்களுடன் ஸ்டாலின் என்னும் உன்னத திட்டத்தை நேற்று கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. ”உங்களுடன் ஸ்டாலின் முகாமை தொடங்கி வைத்து. திட்ட முகாமில் துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு பார்வையிட்டு செய்யப்படுவதை மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். உடன் அப்துல்ரஷீத், ஏ.வி.ராமமூர்த்தி, கே.வி.லோகேஷ், இரா.அறிவழகன், வி.பி.ரவிகுமார், எம்.கேசவன், மு.பாஸ்கர், சங்கர், கோல்டுமணி, சம்சூதின், ராமஜெயம், பாபு, சித்ராபாபு, சீனிவாசன், வெங்கடேசன், ரரேஷ், கோகுல், ஜீவா, ஜெய்கணேஷ், ரஹீம், பரத்குமார். சாண்டிலியன், அஜீத், நகாராஜ், தமிழ்செல்வன், திருபுரசந்திரி நெடுஞ்செழியன், ராணி, அசோக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.